செய்தி வெளியீடு எண் : 785 நாள்: 16.05.2022

# மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வரும் அரசு கழக அரசு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் 256 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.61.44 லட்சம் காசோலைகளை வழங்கி – மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தகவல்

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் இன்று (16.5.2022) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய சுபேதார் கார்டன் திட்டப்பகுதியில் மறுகட்டுமானம் செய்யப்படவுள்ள குடியிருப்புகளில் வசிக்கும் 256 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.61.44 லட்சம் காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பேசுகையில் "குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் கான்கீரிட் வீடுகளில் வாழ வேண்டும் என்ற நல்ல நோக்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த வாரியம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னை சுபேதார் கார்டன் திட்டப்பகுதியில் 1974 ஆம் ஆண்டு 256 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வாரிய பராமரிப்பில் இருந்து வந்தது.

நாடளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலின் போது உங்களின் வாக்குகளை கேட்டு எங்கள் வேட்பாளர்கள் வரும்பொழுது எங்களுக்கு புதிய வீடு கட்டித்தர வேண்டும் என கோரிக்கை வைத்தீர்கள். அதனை ஏற்று புதிய வீடுகள் கட்டித்தரப்படும் என உங்களுக்கு வாக்குறுதி அளித்தார்கள். அதனை நிறைவேற்றும் விதமாக இன்றைய தினம் இந்த நிகழ்வு நடைபெற்று கொண்டிருக்கின்றது. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வரும் அரசு கழக அரசு .

எங்களது அடுக்குமாடி குடியிருப்பினை இடித்து விட்டு புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி தரவேண்டும். என்று இத்திட்டப்பகுதியானது கட்டப்பட்டு 48 வருடங்களாகின்றது அதன் உறுதிதன்மை குறித்து தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்குழு 256 குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்ய பரிந்துரைத்தது. அதனடிப்படையில் ஒரு வீடு 415 ச.அடி பரப்பளவில் 300 வீடுகள் ரூ.40.13 கோடி மதிப்பீட்டில், நல்லத்தரத்தில், அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் 15 மாதங்களில் கட்டித் தரப்படும்.

இக்குடியிருப்புதாரர்களுக்கு மறுகட்டுமான காலங்களில் வெளியே வாடகையில் தங்குவதற்காக கடந்த கால ஆட்சியில் ரூ.8000 வழங்கப்பட்டு வந்த கருணைத் தொகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி ஒரு குடும்பத்திற்கு ரூ.24,000 வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் 256 குடும்பங்களுக்கு தலா ரூ.24,000 வீதம் ரூ.61.44 லட்சம் காசோலையாக வழங்கப்படவுள்ளது.

இவ்வாரியத்தால் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடங்கள் நீண்ட நாள் பயன்பாடு மற்றும் தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாக சிதிலமடைந்துள்ளதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, அண்ணா பல்கலைகழக தொழில்நுட்ப வல்லுநர் குழுக்கள் நியமிக்கப்பட்டு, சென்னையில் 20 ஆண்டுகள் கடந்த அனைத்து திட்டப்பகுதிகளின் குடியிருப்புகளை ஆய்வு மேற்கொண்டு அறிக்கை பெறப்பட்டது. இத்தொழில்நுட்பக் குழு 96 திட்டப்பகுதிகளிலுள்ள 30,517 பழைய குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்ய பரிந்துரை செய்தது.

சென்னையில் மட்டும் 27,500 அடுக்குமாடி குடியிருப்புகள் மக்கள் வாழ தகுதியற்ற வீடுகளாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகளை கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்தப்படி ரூ.1200 கோடியில் 7500 வீடுகளும், நடப்பாண்டு ரூ.1200 கோடியில் 7500 வீடுகளும் ஆக மொத்தம் ரூ.2400 கோடி மதிப்பீட்டில் 15000 அடுக்குமாடி குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சென்னையில் இதுவரை குயில்தோட்டம் மற்றும் திருவொற்றியூர் திட்டப்பகுதிகளில் மறுகட்டுமானம் செய்யப்படவுள்ள குடியிருப்புகளில் வசிக்கும் 667 குடியிருப்புதாரர்களுக்கும், இன்று சுபேதார் கார்டன் திட்டப்பகுதியில் வழங்கப்படவுள்ள 256 குடியிருப்புதாரர்களையும் சேர்த்து மொத்தம் 923 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.2.21 கோடி வழங்கப்பட்டுள்ளது. சாலைகள், வடிகால்கள், குடிநீர் திட்டப்பணிகள், போன்றவற்றிற்கு ஏற்படும் செலவீனத்தை குடியிருப்புதாரர்கள் மீது சுமத்த கூடாது இதனை அரசே ஏற்க வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டதின் அடிப்படையில் பயனாளிகளின் பங்களிப்பு தொகை தற்போது குறைப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி இ.ஆ.ப., ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், பணிகள் குழு தலைவர் திரு.நே.சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டல குழு தலைவர் திரு.எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் திருமதி. எலிசபெத் அகஸ்டின், வாரிய தலைமை பொறியாளர் திரு. இராம சேதுபதி, நிர்வாகப் பொறியாளர் திரு.தா.முருகேசன், தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு.ஜே.அ.நிர்மல் ராஜ், வாரிய பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துக் கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in